தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **28.10.2026**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மக்காச்சோளத்திற்கான அறுவடைக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

மக்காச்சோளம் தானியங்களின் ராணி என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது இந்தியாவில் பயிரிடப்படும் மிகவும் பன்முகப் பயன்பாடு கொண்ட பயிராகும். மனித நுகர்வு மட்டுமின்றி தீவன உற்பத்தி, எரிபொருள் கலவை, மாவுச்சத்து பதப்படுத்துதல் போன்ற பயன்பாடுகளுக்காக இதன் தேவை அதிகரித்து வருவதால் சமீப நாட்களில் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, இந்தியா 144.08 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்து 550.93 லட்சம் டன் மக்காச்சோளத்தை உற்பத்தி செய்துள்ளது (2025–26). மத்தியப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, பீகார் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை இந்தியாவில் மக்காச்சோளத்தை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும். சமீபத்தில் பருவமழை குறைந்ததால், கரீஃப் பருவக்காலப் பகுதி கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இயல்பை விடக் குறைவான மழைப்பொழிவு, மக்காச்சோளத்தின் விளைச்சலைப் பாதித்து, அதன் காரணமாகவே சாகுபடிப் பரப்பு குறைந்துள்ளது என்று ஐக்கிய அமெரிக்க வேளாண்மைத் துறையும் சுட்டிக்காட்டியுள்ளது (USDA, 2026).

மக்காச்சோளம் உற்பத்தி செய்யும் இந்தியாவின் முக்கிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இங்கு 5.4 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்து 33 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. சேலம், நாமக்கல், பெரம்பலூர், அரியலூர், விழுப்புரம் மற்றும் திருப்பூர் ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய மக்காச்சோள உற்பத்தியாளர்களாகும். தமிழகம், உள் மாநில மக்காச்சோள உற்பத்தி மட்டுமன்றி தனது தேவைகளுக்காக பீகார், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட பிற மாநிலங்களைச் சார்ந்துள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையமானது, தென் தீபகற்பப் பகுதியில் வடகிழக்குப் பருவமழை இயல்பை விடக் குறைவான மழையைக் கொண்டுவர வாய்ப்புள்ளது என்று எச்சரித்துள்ளது. எனவே, பருவமழைப் பற்றாக்குறை தமிழ்நாட்டில் மக்காச்சோளத்தின் விநியோகத்தைப் பாதித்து, விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் வேளாண் பொருளியல் துறையில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, உடுமலைப்பேட்டை சந்தையில் கடந்த 15 ஆண்டுகளாக நிலவிய மக்காச்சோள விலைகளைப் பகுப்பாய்வு செய்து, சந்தை ஆய்வையும் நடத்தியது. அதன்படி, அறுவடைக் காலத்தில் நல்ல தரமான மக்காச்சோளத்தின் பண்ணை விலை குவிண்டாலுக்குத் தோராயமாக சுமார் ரூ 2,700 ஆக இருக்கும். அதற்கு மேற்பட்ட விலை ஏற்ற இறக்கங்கள் பீகாரிலிருந்து வரும் மக்காச்சோளத்தின் வரவைப் பொறுத்து இருக்கலாம். எனவே, விவசாயிகள் தகுந்த விற்பனை முடிவுகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு
வேளாண் பொருளியல் துறை
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 003
தொலைபேசி: 0422–2431405
மின்னஞ்சல்: tndemic@gmail.com

மக்கள் தொடர்பு அலுவலர்